மக்கள்

# கொரோனா தொற்றில் மருத்துவத் துறை சந்தித்த சவால்: பாலாஜி மருத்துவக் கல்லூரியில் 2 நாள் தேசிய ஆன்லைன் மாநாடு துவங்கியது

## டீன் டாக்டர் ஜான்சன் தகவல்



சென்னை, ஜூலை.16–

கொரோனா பேரிடரில் மருத்துவத் துறை சந்தித்த சவால்கள் பற்றி ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி தேசிய ஆன்லைன் மாநாடு இன்று (16ந் தேதி)யும் நாளையும் (17ந் தேதி) இரு நாட்கள் நடைபெறுகிறது.

இக்கல்லூரி பாரத் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஆகும். ஆன்லைன் மாநாட்டில் ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி உடற்கூறியல் துறை, தடயவியல் துறை இரண்டும் இணைந்து கொரானா கால பாதிப்புகள் குறித்து விவாதிக்க உள்ளனர்.

உலக அளவிலான மருத்துவ ஆராய்ச்சிகள் குறித்து அனைத்து நாடுகளிலும் ஆய்வுகள் நடந்து வருகிறது. இந்திய அளவில் இது குறித்து மருத்துவ ஆராய்ச்சிகள் நடைபெறும் இந்த சூழலில் மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் அறிய வேண்டிய புதிய கண்டுபிடிப்புகளை விளக்கம் அளிக்கும் மாநாடாக இந்த ஆன்லைன் மாநாடு நடைபெறுகிறது. ஃபோரான்சிங்க் என்ற பெயரில் துவங்கியுள்ள மாநாடு பற்றி கல்லூரி டீன் டாக்டர் ஜான்சன் தெரிவித்ததாவது " இன்றைய கொரோனா பேரிடரில் மருத்துவ துறை மக்கள் உயிர் காக்கும் பணிகளில் தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுகிறது. இந்த மாநாட்டில் நானும், எங்கள் கல்லூரியின் துணை முதல்வர் ஜே. தங்காவும் பங்கேற்கிறோம்.

மாநாடு ஏற்பாடுகள் எங்கள் கல்லூரி உடற்கூறியல் துறை தலைவர் டாக்டர் கணேசன் முருகப்பெருமாள் செய்துள்ளார்.

மருத்துவ ப் படிப்பு படிக்கும் மாணவர்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகள் செய்பவர்கள் இந்த இணைய மாநாடு மூலமாக கொரோனா கால பாதிப்புகள் குறித்து அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். சிறப்பான இந்த ஆன்லைன் மாநாட்டில் சேலம் விநாயக மிஷன் கிருபானந்த வாரியார் மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் தீப்தி சாஸ்திரி இதற்கு தலைமை தாங்கினார்.

இவ்வாறு டாக்டர் ஜான்சன் கூறினார்.

இம்மாநாடு குறித்து மாநாடு ஏற்பாடுகள் செய்த டாக்டர் கணேசன் முருகப்பெருமாள், "உடற்கூறியல் துறை, தடயவியல் துறை இரண்டும் சங்கமித்து நடத்தக் கூடிய மாநாடு இது. மருத்துவ ஆராய்ச்சிகளில் இந்த இரண்டு துறைகள் பல்வேறு வகையில் ஆய்வுகள் செய்வதில் உடன்பட்ட துறைகள். இந்த துறைகள் பல்வேறு வகையில் ஆய்வுகள் கண்டறிவதில் முன்னணியில் உள்ளன என்றார்.

மனித எலும்பு அளவு அதன் அமைப்பு செயல்பாடு உள்ளிட்ட நுண்ணியக் குறிப்புகள் மூலம் இறந்தவரின் வயது கண்டறிதல், மண்ணில் புதைந்த எப்படி பதப்படுத்தி வைப்பது மற்றும் பல்வேறு வகையில் ஆய்வுகள் கண்டறிய ஆண்டு தோறும் ஆய்வரங்கம் நடைபெற்று வருகிறது. கடந்த இரு ஆண்டுகளாக கொரானா சூழலில் இறந்தவர்கள் உடல்களின் மூலம் புதிய கண்டுபிடிப்பு களை கண்டறிந்து வருகிறோம். கொரானா கால பிண சீரமைப்பிற்கு பல சவால் களை சந்தித்து வருகிறோம். உடற்கூறியல் துறை போல தடய அறிவியல் துறை இரண்டும் ஒன்றுடன் ஒன்று புதிய கண்டுபிடிப்பு களை கண்டறிந்து வருகிறது என்றும் கூறினார்.

மாநாட்டில் இன்றைய நிகழ்வில் மூத்த தடயவியல் டாக்டர் ஆர். செல்வகுமார், தடயவியல் இளநிலை அறிவியல் அதிகாரி ஏ.ஜீவநாதன், எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம் துணை தலைவர் டாக்டர் பி.சம்பத் குமார் பங்கேற்றனர்.

நாளை (17ந் தேதி) ஆந்திராவைச் சேர்ந்த தடயவியல் பேராசிரியர்கள் டாக்டர் கே.சீனிவாசலு, டாக்டர் எஸ். வி. பணீந்திரா, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி டாக்டர் கீதாஞ்சலி, தடயவியல் இணைப் பேராசிரியர் டாக்டர் பி.வினோத் குமார் பங்கேற்கின்றனர்.

இது மட்டுமின்றி நாடெங்கும் உள்ள உடற்கூறியல் துறை, தடயவியல் துறைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்கின்றனர். மாநாட்டில் பங்கேற்க foransync2021@gmail.com மின் அஞ்சல் வழியில் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு வழிகாட்டிகளாக டாக்டர் ஜி.துர்காதேவி (98403 93889) டாக்டர் ரா.கே (9944072470) செயல்படுகிறார்கள்" என்று டாக்டர் கணேசன் முருகப்பெருமாள் தெரிவித்தார்.